බුද්ධශාසන, ආගමික හා සංස්කෘතික කටයුතු අමාත්‍යාංශය
புத்தசாசனம், மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு
Ministry of Buddhasasana, Religious and Cultural Affairs
සංස්කෘතික අංශය கலாசார பிரிவு Cultural Division

8 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. 8 ஆம் மாடி, செத்சிறிபாய பத்தரமுல்லை, ஸ்ரீ லங்கா
8th Floor, Sethsiripaya, Battaramulla, Sri Lanka

මගේ අංකය / எனது இல / My No.: சிஏ 6/1/10/6/1
ඔබේ අංකය / உமது இல / Your No.:
දිනය / திகதி / Date.: 2024.06.20

அமைச்சின் செயலாளர்கள்
மாகாண தலைமைச் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**அரச உத்தியோகத்தர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டி - 2024**

அரச நிறுவனங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்களின் ஆக்கத் திறன்களை மேம்படுத்துதல், மதிப்பளித்தல் மற்றும் இவ் ஆக்கங்களை வெளியிடுவதற்கான வாய்ப்புக்களை வழங்குதல் மற்றும் அதன் மூலம் அரச நிறுவனங்களின் கலாசார நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் நோக்குடன் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு இவ் வருடமும் அரச உத்தியோகத்தர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டியினை நடாத்துவதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

**01. போட்டிப் பிரிவுகள்**

1.1 சிறுகதை
1.2 பாடலாக்கம்
1.3 கவிதை
1.4 சிறுவர் இலக்கிய ஆக்கம்
1.5 குறு நாடகம்
1.6 சித்திர ஆக்கம்
1.7 குறுந் திரைப்படம்
1.8 புகைப்படம்

**02. பொது நிபந்தனைகள்**

2.1 அமைச்சுக்கள், திணைக்களங்கள் உட்பட அரச சேவையில் மற்றும் அரசுடன் இணைந்த சேவையில் ஈடுபட்டுள்ள அனைவரும் இந்தப் போட்டியில் பங்குபற்ற முடியும் என்பதுடன் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் தலைமை அலுவலக உத்தியோகத்தர்கள் தவிர அதனுடன் இணைந்த நிறுவனங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களும் இப் போட்டியில் பங்குபற்ற முடியும் என்பதனையும் தாழ்மையுடன் அறியத் தருகின்றேன்.

2.2 விண்ணப்பப் படிவத்தில் தவிர போட்டியாளரின் பெயர் அல்லது நிறுவனம் குறித்த எந்தவொரு குறிப்பும் ஆக்கத்தில் உள்ளடக்கப்படக் கூடாது. எந்தவொரு விடயத்திலும் அத்தகைய குறிப்பு சமபந்தப்பட்ட சிறுகதை, பாடலாக்கம், கவிதை, சிறுவர் இலக்கிய ஆக்கம், நாடக கையெழுத்துப் பிரதி, குறுந் திரைப்படம், புகைப்படம் மற்றும் சித்திரம் என்பவற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தால் அந்த ஆக்கம் நிராகரிக்கப்படும்.

2.3 சமர்ப்பிக்கப்படும் ஆக்கம் சுயாதீனமாக இருக்க வேண்டியதுடன் மொழிபெயர்ப்புக்கள்

2.4 எந்தவொரு இனம், மதம் மற்றும் பெயர் பெற்ற நபர்களின் குணாதிசயங்களை அவமதிக்கும் வகையில் அல்லது எந்தவொரு நபருக்கும் அல்லது குழுவிற்கும் துன்பம் அல்லது அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையில் அல்லது அரசாங்க அல்லது அரசாங்க கொள்கைகளை விமர்சிக்கும் வகையில் சமர்ப்பிக்கப்படக் கூடாது என்பதுடன் அத்தகைய படைப்புக்கள் நிராகரிக்கப்படும். தேசிய ஒற்றுமை அல்லது மத நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் எந்தவொரு ஆக்கமும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அத்தகைய ஆக்கத்தைப் போட்டிக்குச் சமர்ப்பிப்பதில் ஏதேனும் சிக்கல் ஏற்பட்டால் இது தொடர்பாக கலாசார அலுவல்கள் அமைச்சு பொறுப்பு ஏற்க மாட்டாது என்பதுடன் அந்தப் பொறுப்பு சம்பந்தப்பட்ட ஆக்கத் திறனாளியின் பொறுப்பு ஆகும்.

2.5 சிறுகதை, பாடலாக்கம், கவிதை, சிறுவர் இலக்கிய ஆக்கம், குறுநாடகப் போட்டிகள் மட்டும் விண்ணப்பிக்கும் போது சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் இடம்பெறும்.

2.6 தாமதமாகக் கிடைக்கும் மற்றும் போட்டி நிபந்தனைகளுக்கு மாறான ஆக்கங்கள் எந்தவொரு முன் அறிவிப்பும் இல்லாமல் நிராகரிக்கப்படும்.

2.7 அரச உத்தியோகத்தர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டி தொடர்பான அனைத்துக் கொள்கை முடிவுகளும் மற்றும் இறுதிப் பொறுப்புக்களையும் கலாசார அமைச்சு கொண்டுள்ளது.

## 01. <u>ஆக்கங்களைச் சமர்ப்பித்தல்</u>

3.1 இதனுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு நிறுவனத் தலைவரின் பரிந்துரைகளுடன் ஆக்கங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். நிறுவனத் தலைவரின் பரிந்துரை, அதிகாரபூர்வ முத்திரை மற்றும் கையொப்பம் இல்லாத ஆக்கங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

3.2 சமர்ப்பிக்கப்படும் அனைத்து ஆக்கங்களும் செயலாளர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு 08 ஆம் மாடி, செத்சிறிபாய 1 ஆம் கட்டம், பத்தரமுல்லை என்ற முகவரிக்கு 2024.08.31 ஆம் திகதிக்கு முன்னர் தபால் மூலமாக அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாக அமைச்சின் மேம்பாட்டுப் பிரிவிற்கு கையளிப்பதற்குரிய நடவடிக்கைகளைச் செய்தல் வேண்டும் என்பதுடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **“அரச உத்தியோகத்தர்களுக்கு இடையிலான ஆக்கத்திறன் போட்டி – 2024 (போட்டிப் பிரிவினைக் குறிப்பிட்டு)”** எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

## 02. <u>போட்டித் தீர்ப்பு</u>

4.1 சிறுகதை, பாடலாக்கம், கவிதை, சிறுவர் இலக்கிய ஆக்கம், குறுநாடகப் போட்டி என்பன சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய ஊடக மொழிகளில் தனித்

தனியாக நடாத்தப்படும் அதேவேளை குறுந் திரைப்படம், சித்திரம் மற்றும் புகைப்படப் போட்டிகள் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய ஊடக மொழிகளில் தனித் தனியாக நடாத்தப்படமாட்டாது.

4.2 நிபுணத்துவம் பெற்ற ஒரு நடுவர் குழுவின் மூலம் ஆக்கங்கள் தீர்மானிக்கப்படுவதுடன் நிபுணர் குழுவின் முடிவே இறுதி முடிவாக அமையும்.

4.3 இந்தப் போட்டிக்கு நிர்ணயிக்கப்பட்ட தரங்களுக்கு அமைய ஆக்கங்கள் பெறப்படா விட்டால் இந்தப் போட்டிக்கு உரிய பரிசுகள், சான்றிதழ்கள் அல்லது விருதுகள் எதையும் வழங்காமல் இருக்க நடுவர் குழுவிற்கு உரிமை உண்டு.

4.4. போட்டி நிபந்தனைகளுக்கு முரணாண வகையில் ஆக்கங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருப்பது நிரூபிக்கப்பட்டால் விருதுகள் வழங்கப்பட்ட பின்னரும் அந்த வெற்றிகள் இரத்துச் செய்யப்பட்டு விருதுகள் திரும்பப் பெறப்படுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். போட்டி நிபந்தனைகளை மீறும் ஆக்கத் திறனாளிகளை தடுப்புப் பட்டியலில் சேர்த்துக் கொள்வதற்குரிய (Black List) நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**03. <u>இலக்கியப் போட.டிகள்</u>**

**5.1 <u>போட்டி விதிமுறைகள்</u>**

5.1.1 பாடலாக்கம், கவிதை மற்றும் சிறுகதை A4 அளவிலான தாளின் தனிப்பக்கத்தில் கணனிமயமாக்கப்படல் வேண்டும். அனைத்து ஆக்கங்களும் Kalakam எழுத்து அமைப்பில் கணனிப்பதிவு செய்யப்படல் வேண்டும். பாடலாக்கம், கவிதை மற்றும் சிறுகதை என்பவற்றிற்கான எழுத்து அளவு 12 ஆக இருப்பதுடன் சிறுவராக்கத்திற்கான எழுத்து அளவு 16 ஆக இருத்தல் வேண்டும்.

5.1.2 இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்படிவத்தினை முறையாகப் பூர்த்தி செய்து நிறுவனத் தலைவரின் சான்றுபடுத்தலுடன் ஆக்கத்தினை சமர்ப்பிக்க வேண்டும். நிறுவனத் தலைவரின் உத்தியோக பூர்வ முத்திரை மற்றும் கையொப்பமிடபடாத ஆக்கங்களின் பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

5.1.3 வெற்றி பெறும் பாடலாக்கத்திற்கான முழுமையான உரித்து ஆக்கத் திறனாளிக்கு உரியதாக இருப்பதுடன் அதனை விளம்பரப்படுத்துவதற்கான உரிமை கலாசார அலுவல்கள் அமைச்சிற்கு உரியதாகும்.

5.1.4 ஒவ்வொரு ஆக்கத்திற்கும் தனித்தனியான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன் ஒரு போட்டிப் பிரிவில் ஒரு ஆக்கத்தினை மட்டும் சமர்ப்பித்தல் வேண்டும்.

- <u>இலக்கியம்</u>

- **<u>சிறுகதை</u>**
  - ஆகக் கூடியது 2000 சொற்களுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

- **பாடல்**
    - 3 - 3½ நிமிடங்களுக்கு உட்பட்டதாக இருப்பதுடன் இசைநயத்துடன் கூடிய ஒரு ஒழுங்கினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

- **கவிதை**
    - ஆகக் கூடியது பத்து செய்யுள் பகுதிகளை மாத்திரம் கொண்டிருத்தல் வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்ட போட்டிகள் எந்தவொரு கருப்பொருளின் கீழும் தயாரிக்கப்படலாம்.

- **சிறுவர் ஆக்கம் (சிறுபிள்ளைகளுக்கான இலக்கிய ஆக்கம்)**

I. சிறுவர் கதைப் புத்தகமாகவோ அல்லது சிறுவர் பாடலாகவோ அதற்குரிய சித்திரங்களுடன் எழுதப்படல் வேண்டும்.

II. 10 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்குப் பொருத்தமான விடயத்தை சிறுவர்களின் மனதினை மேம்படுத்தக் கூடிய விதத்தில் அமைந்த கருத்துக்களைக் கொண்டு ஆக்கங்களை உருவாக்கி இருத்தல் வேண்டும்.

III. 5 - 7 வயதிற்குட்பட்ட பிள்ளைகளுக்கான ஆக்கம் 16 பக்கங்களுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும். 8 - 10 வயதிற்குட்பட்ட பிள்ளைகளுக்கான ஆக்கம் 16 பக்கங்களுக்கு மேற்பட்டதாகவும் 32 பக்கங்களுக்கு உட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

### 5.2 இலக்கிய போட்டிகளுக்கான பணப் பரிசுகள் மற்றும் விருதுகள்

| போட்டிப் பிரிவு | இடம் | பணத்தொகை (ரூ.) |
|---|---|---|
| சிறுகதை<br>பாடலாக்கம்<br>கவிதை | முதலாமிடம் | 20,000.00 |
| | இரண்டாமிடம் | 15,000.00 |
| | மூன்றாமிடம் | 10,000.00 |
| | ஒவ்வொரு போட்டிப் பிரிவுகளிலும் ஆறுதல் பரிசு (05) பெறுபவர்கள். | வெற்றியாளர் ஒருவருக்கு ரூ.5,000.00 வீதம் |

### 5.3 சிறுவர் இலக்கிய ஆக்கத்திற்கான பணப் பரிசுகள் மற்றும் விருதுகள்

| போட்டிப் பிரிவு | இடம் | பணத்தொகை (ரூ.) |
|---|---|---|
| சிறுவர் இலக்கிய ஆக்கம் | முதலாமிடம் | 20,000.00 |
| | இரண்டாமிடம் | 15,000.00 |
| | மூன்றாமிடம் | 10,000.00 |

| | | |
|---|---|---|
| | 05 ஆறுதல் பரிசுகள் தெரிவு செய்யப்படும். | வெற்றியாளர் ஒருவருக்கு ரூ.5,000.00 வீதம் |
| சிறுவர் இலக்கிய சித்திர ஆக்கம் | முதலாமிடம் | 20,000.00 |
| | இரண்டாமிடம் | 15,000.00 |
| | மூன்றாமிடம் | 10,000.00 |
| | 05 ஆறுதல் பரிசுகள் தெரிவு செய்யப்படும். | வெற்றியாளர் ஒருவருக்கு ரூ.5,000.00 வீதம் |

## 04. <u>குறு நாடகம்</u>

### <u>6.1 போட்டி விதிமுறைகள்</u>

6.1.1 போட்டிகளுக்காக கையெழுத்துப் பிரதிகளைக் கோருதல் நாடு முழுவதும் மேற்கொள்ளப்படுவதுடன், சமர்ப்பிக்கப்பட்ட கையெழுத்துப் பிரதிகளை ஆய்வுக் குழுவிடம் சமர்ப்பித்த பின்னர் பொருத்தமான கையெழுத்துப் பிரதிகள் மதிப்பு எண்களின் முன்னுரிமையின் அடிப்படையில் மேடை ஏற்றுவதற்குப் பொருத்தமான 10 குறு நாடகங்கள் தேர்ந்து எடுக்கப்படும்.

6.1.2 மேடை வடிவமைப்பு, ஆடை வடிவமைப்பு, ஒளியமைப்பு, இசை அமைப்பு, நடன வடிவமைப்பு, மேடை நிர்வாகம், முக ஒப்பனை, நடிப்பு, வசனம் எழுதுதல் மற்றும் இயக்கம் ஆகிய பிரிவுகளுக்காகவும் புள்ளிகள் வழங்கப்படும்.

6.1.3 நாடகத்தின் மேடை வடிவமைப்பு, ஆடை வடிவமைப்பு, ஒளியமைப்பு, இசை அமைப்பு மற்றும் முக ஒப்பனை ஆகிய துணை அம்சங்களுக்காக மட்டுமே அரசு சாராத உத்தியோகத்தர்களை பணிக்கு அமர்த்த அனுமதிக்கப்படுவார்கள் ஆனால் அவர்கள் விருதுகளைப் பெறத் தகுதி அற்றவர்கள். எனினும் நாடகத்தின் நடிகர்கள் மற்றும் நடிகைகள், வசனம் எழுதுபவர் மற்றும் இயக்குநர் அரச ஊழியர்களாக இருத்தல் வேண்டும்.

6.1.4 ஒரு நாடகத்திற்காக ஒரே நிறுவனத்தினால் அனைத்துக் கலைஞர்களும் முன்வைக்கப்படுவது அவசியம் இல்லை என்பதுடன் இதற்கான தகுதி உடைய எந்தவொரு அரச உத்தியோகத்தருக்கும் நடிக்க வாய்ப்பு உள்ளது. எனினும் நாடகத்தின் இயக்குநருக்குச் சொந்தமான நிறுவனத்துடன் மட்டும் கடிதப் பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்படும்.

6.1.5 ஒரு போட்டியாளருக்கு எந்தவொரு துணைப் பிரிவிலும் ஒரு நாடகத்தில் மட்டுமே பங்களிப்புச் செய்ய முடியும்.

6.1.6 போட்டிக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நாடகம் 2024 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட நாடகமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் இதற்கு முன்னய ஆண்டுகளில் பொது மக்களின் காட்சிக்காகவோ அல்லது நாடகப் போட்டிகளில் வெற்றி பெறாத நாடகமாக இருத்தல் வேண்டும்.

6.1.7 கையெழுத்துப் பிரதியானது ஆய்வின் பின்னர் மேடையேற்றுவதற்காகப் பரிந்துரைக்கப்பட்ட நாடகங்களை அரங்கேற்றுவதற்கு முன்னர் பொதுத் தணிக்கைச் சபையின் அனுமதி பெறப்படல் வேண்டும். போட்டி நடைபெறும் நாளில் பொதுத்

தணிக்கைச் சபையின் சான்றிதழின் நகலை அமைச்சிடம் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கத் தவறிய நாடகங்கள் போட்டியில் இருந்து நீக்கப்படும்.

6.1.8 நாடகப் போட்டியில் ஒரு நாடகத்தை குறிப்பிட்ட திகதியில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நடாத்த ஒப்புக் கொண்டு நாடகத்தை நடாத்தத் தவறினால் சம்பந்தப்பட்ட நாடக இயக்குநர் தானாக முன்வந்து அந்த நாடகத்தை போட்டியில் இருந்து விலக்கிக் கொண்டதாகக் கருதப்படுவார். மேலும் திட்டமிட்ட திகதியில் தனது நாடகத்தை நிகழ்த்த முடியவில்லை என்றால் குறைந்தது ஒரு வாரத்திற்கு முன்பே அறிவிக்க வேண்டியது நாடக இயக்குநரின் பொறுப்பாகும்.

6.1.9 இப் போட்டியில் பங்கேற்கத் தகுதி இல்லாத எவரும் தனது நாடகத்தில் தலையிடாமல் இருப்பதை நாடகத்தின் இயக்குநர் உறுதி செய்ய வேண்டும். அத்தகைய நபர் நாடகத்தில் தலையிட்டதாக சந்தேகம் ஏற்படும் சந்தர்ப்பத்தில், அந்த நாடகத்தை போட்டியில் இருந்து முற்றாக நீக்கும் அதிகாரம் அமைச்சின் செயலாளர் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட பதவிநிலை உத்தியோகத்தருக்கு உண்டு.

6.1.10 போட்டிக்காகப் பங்கேற்கும் போது போட்டியில் கலந்துகொள்ளும் ஒவ்வொரு போட்டியாளரும் தான் பணி புரியும் நிறுவனத்தின் தலைவரால் அரச சேவையில் நிரந்தர ஊதியம் பெறும் பதவியில் பணிபுரிவதாக சான்றளிக்கும் கடிதத்தை சமர்ப்பிக்க வேண்டும். அத்துடன் அவர்களின் தேசிய அடையாள அட்டையையும் கட்டாயமாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

6.1.11 சுற்றறிக்கையின்படி, இந்தப் போட்டியில் கலந்து கொள்ளத் தகுதியுடைய ஒருவர் அதை நிரூபிக்கும் பொறுப்பை ஏற்க வேண்டும், மேலும் அது தொடர்பான தகவல்களைக் கோரும்போது முன்வைக்கத் தயாராக இருக்க வேண்டும். அமைச்சின் செயலாளருக்கோ அல்லது அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட பதவிநிலை உத்தியோகத்தரோ திருப்தி அடையும் வகையில் தகவலை வழங்கத் தவறினால், போட்டியில் இருந்து முழு நாடகத்தையும் நீக்குவதற்கு ஒரு காரணமாக அமையும்.

6.1.12 அரச உத்தியோகத்தர்களுக்கிடையேயான குறு நாடகப் போட்டியின் நிபந்தனைகளை மீறுதல் தொடர்பான முறைப்பாடுகள் இருப்பின் நாடகம் நடைபெறுவதற்கு 03 நாட்களுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும். முடிவுகள் வெளியான பின்னர் முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் நிராகரிக்கப்படும்.

6.1.13 மேலும் முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்கும் போது, அதனைச் சமர்ப்பிப்பவர்கள் தங்கள் அடையாளத்துடன் முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்க வேண்டும் மேலும், பெயர் குறிப்பிடாமல் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள் நிராகரிக்கப்படும்.

6.1.14 குறு நாடகப் போட்டிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடகங்கள் தொடர்பாக ஏதேனும் உரிமை கோரல் அல்லது ஆட்சேபனை முன்வைக்கப்பட்டால், அது முறையாக ஒரு உறுதி மொழி மூலம் கலாசார அலுவல்கள் அமைச்சிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

6.1.15 மேலே குறிப்பிடப்பட்ட 6.1.13 மற்றும் 6.1.14 பிரிவுகளின்படி பெறப்பட்ட முறைப்பாடுகள் அல்லது உரிமை கோரல் எதிர்ப்பு என்பன நியாயத்தின் அடிப்படையில் திருப்தி அடைந்தால் விருது வழங்கும் விழாவிற்குப் பின்னரும் சம்பந்தப்பட்ட நாடகம் / நாடகங்களை முழுவதுமாக நீக்கலாம். போட்டியில் வழங்கப்பட்ட விருதுகள், சான்றிதழ்கள், பரிசுகள் என்பவற்றை அமைச்சின் செயலாளருக்கோ அல்லது அதிகாரம் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தருக்கோ அதனை மீட்கும் அதிகாரம் உண்டு.

6.1.16 தவிர்க்க முடியாத காரணங்களால் அல்லது போதிய எண்ணிக்கையில் கையெழுத்துப் பிரதிகள் இல்லாத காரணத்தினால் அல்லது வழங்கப்பட்ட நாடகங்களின் தரம் குறைவு காரணமாக அல்லது சந்தர்ப்பவாத காரணங்களால் இந்த நாடகப் போட்டியை நடத்தவோ அல்லது ஒத்திவைக்கவோ கலாசார அலுவல்கள் அமைச்சிற்கு அதிகாரம் உண்டு.

6.1.17 குறு நாடக கையெழுத்துப் பிரதிகள் A4 அளவுத் தாளின் ஒரு பக்கத்தில் கணினிமயமாக்கப்படல் வேண்டும். அந்த கையெழுத்துப் பிரதிகள் கணினிமயமாக்கப்படல் வேண்டியதுடன் எழுத்துரு அளவு 12 அலகுகளான இருத்தல் வேண்டும்.

**<u>6.2 குறு நாடகப் போட்டிக்காக வழங்கப்படும் பணப் பரிசில்கள் மற்றும் விருதுகள்</u>**

| **தொ. இல.** | **போட்டிப் பிரிவு** | **பணப் பரிசு (ரூ.)** |
|---|---|---|
| 6.2.1 | வருடத்தின் சிறந்த மேடை வடிவமைப்பு | 10,000.00 |
| 6.2.2 | வருடத்தின் சிறந்த ஆடை வடிவமைப்பு | 10,000.00 |
| 6.2.3 | வருடத்தின் சிறந்த இசை அமைப்பு | 10,000.00 |
| 6.2.4 | வருடத்தின் சிறந்த நடன வடிவமைப்பு | 10,000.00 |
| 6.2.5 | வருடத்தின் சிறந்த முக ஒப்பனை | 10,000.00 |
| 6.2.6 | வருடத்தின் சிறந்த மேடை நிர்வாகம் | 10,000.00 |
| 6.2.7 | வருடத்தின் சிறந்த ஒளியமைப்பு | 10,000.00 |
| 6.2.8 | வருடத்தின் சிறந்த துணை நடிகை | 10,000.00 |
| 6.2.9 | வருடத்தின் சிறந்த துணை நடிகர் | 10,000.00 |
| 6.2.10 | வருடத்தின் சிறந்த நடிகை | 15,000.00 |
| 6.2.11 | வருடத்தின் சிறந்த நடிகர் | 15,000.00 |
| 6.2.12 | யூரி விசேட விருது (ஆகக் கூடியது 2) | 5,000.00 ஒவ்வொன்றும் |
| 6.2.13 | குறு நாடக கையெழுத்துப் பிரதி மூன்றாம் இடம் | 10,000.00 |
| 6.2.14 | குறு நாடக கையெழுத்துப் பிரதி இரண்டாம் இடம் | 15,000.00 |
| 6.2.15 | வருடத்தின் சிறந்த கையெழுத்துப் பிரதி முதலாம் இடம் | 20,000.00 |
| 6.2.16 | குறு நாடக இயக்கம் மூன்றாம் இடம் | 10,000.00 |
| 6.2.17 | குறு நாடக இயக்கம் இரண்டாம் இடம் | 15,000.00 |
| 6.2.18 | வருடத்தின் சிறந்த குறு நாடக இயக்கம் முதலாம் இடம் | 20,000.00 |
| 6.2.19 | வருடத்தின் சிறந்த குறுநாடகம் | 25,000.00 |

**6.2.3 <u>விண்ணப்பித்தல்</u>**

போட்டிக்காக கையெழுத்துப் பிரதிகளைச் சமர்ப்பிக்கும் போது அது நாடகத்தின் இயக்குநரால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

i. ஒவ்வொரு குறுநாடக கையெழுத்துப் பிரதிகளிலும் 03 பிரதிகளை அனுப்புதல் கட்டாயமாகும்.

ii. அவ்வாறு அனுப்பப்படும் கையெழுத்துப் பிரதிகள் A4 அளவிலான கடதாசியில் ஒரு பக்கத்தை மட்டுமே பயன்படுத்துதல் வேண்டும் மற்றும் கணினிமயமாக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

iii. இயக்குநர் கையெழுத்துப் பிரதி எழுத்தாளராக இல்லாதபோது நாடகத்தின் தயாரிப்பிற்காக கையெழுத்துப் பிரதி எழுத்தாளரிடமிருந்து நாடகத்தின் இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**<u>வேறு</u>**

| |
|---|
| வருடத்தின் சிறந்த குறு நாடகத்தை வழங்கும் நிறுவனத்தின் தலைவருக்கு சிறப்பு பாராட்டு விருதும் வழங்கப்படும். |

## 7. <u>சித்திர ஆக்கங்கள்</u>

### <u>7.1 போட்டி நிபந்தனைகள்</u>

7.1.1 சித்திரங்களை வரைவதற்கு தனக்கு விருப்பமான ஊடகத்தைப் பயன்படுத்தி பொருத்தமான மேற்பரப்பில் (கடதாசி/ பலகை/ கன்வேஸ்) சித்திரத்தை வரையலாம்.

7.1.2 சித்திரங்களின் அளவு 18 x 14 அளவில் இருக்க வேண்டும்.

### <u>7.2 சித்திரப் போட்டிக்காக வழங்கப்படும் பணப் பரிசில்கள் மற்றும் விருதுகள்</u>

| போட்டிப் பிரிவு | நிலை | பணப்பரிசு (ரூ.) |
|---|---|---|
| சித்திரம் | முதலாம் இடம் | 20,000.00 |
| | இரண்டாம் இடம் | 15,000.00 |
| | மூன்றாம் இடம் | 10,000.00 |
| | 05 ஆறுதல்ப் பரிசுகள் தெரிவு செய்யப்படும் | ஒரு வெற்றியாளருக்கு 5,000.00 வீதம் |

## 8. <u>குறுந் திரைப்படம்</u>

### <u>8.1 போட்டி நிபந்தனைகள்</u>

8.1.1 போட்டிக்காக ஒரு விண்ணப்பதாரி ஒரு குறுந் திரைப்படத்தை மட்டுமே சமர்ப்பிக்க முடியும்.

8.1.2 இது ஒரு சுயாதீன தயாரிப்பாக இருக்க வேண்டியதுடன் பொதுமக்கள் பார்ப்பதற்கு திரையிடலுக்கு ஏற்ற குறுந் திரைப்படமாகவும் இருத்தல் வேண்டும்.

8.1.3 இதன் இயங்கும் நேரம் குறைந்த பட்சம் 05 நிமிடங்களும் அதிக பட்சம் 15 நிமிடங்களுக்கும் மட்டுப்படுத்தப்படும்.

8.1.4 இந்த குறுந் திரைப்படம் 2023/ 2024 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் இதற்கு முன்னைய ஆண்டுகளில் எந்தவொரு போட்டிக்காகவோ அல்லது பொதுக் காட்சிக்காகவோ சமர்ப்பிக்கப்படாத ஆக்கமாக இருத்தல் வேண்டும்.

8.1.5 போட்டிக்காகச் சமர்ப்பிக்கப்படும் குறுந் திரைப்படம் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு ஊடக மொழிகளில் அவர்கள் விரும்பும் ஊடகத்தில் படமாக்கப்பட்டு DVD ஊடகத்தில் மட்டுமே மூன்று பிரதிகளாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். (அந்தந்த இறுவட்டுக்களின் இயங்கும் நிலைக்கு போட்டியாளரே பொறுப்பு)

8.1.6 குறும்பட நடிப்பு, கலை இயக்கம், ஒளிப்பதிவு, இசையமைப்பு, திருத்தம் (Editing), ஆடை வடிவமைப்பு, மற்றும் தயாரிப்பு ஆகியவற்றின் துணை அம்சங்களில் மட்டுமே அரச ஊழியர் அல்லாதோர் பங்குபற்ற முடியும்.

8.1.7 குறுந் திரைப்படத்தின் இயக்கமும் எழுத்துருவும் அரச பணியைச் சேர்ந்த ஒருவரால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

8.1.8 வடிவமைப்பு தொடர்பான ஆரம்பச் செலவை போட்டியாளர்கள் ஏற்க வேண்டும் என்பதுடன் ஸ்பொன்சரைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுவர்.

**8.2 குறுந் திரைப்படப் போட்டிக்காக வழங்கப்படும் பணப் பரிசில்கள் மற்றும் விருதுகள்**

| போட்டிப் பிரிவு | நிலை | பணப்பரிசு (ரூ.) |
|---|---|---|
| குறுந் திரைப்படம் | முதலாம் இடம் | 20,000.00 |
| | இரண்டாம் இடம் | 15,000.00 |
| | மூன்றாம் இடம் | 10,000.00 |
| | 05 ஆறுதல்ப் பரிசுகள் தெரிவு செய்யப்படும் | ஒரு வெற்றியாளருக்கு 5,000.00 வீதம் |

## 9. புகைப்படங்கள்

### 9.1 போட்டி நிபந்தனைகள்

9.1.1 இங்கு சமர்ப்பிக்கப்பட்ட புகைப்படங்கள் மாற்றியமைக்க கூடியதாக இல்லாமல் அவற்றின் இயல்பான தோற்றத்தை சிதைக்காத வகையில் அதன் நீளம், அகலம் மற்றும் ஒளி தீவீரம் என்பன சரியாக அமைந்திருத்தல் வேண்டும்.

9.1.2 ஒரு போட்டியாளருக்கு போட்டிக்காக அனுப்பக் கூடிய அதிகபட்ச புகைப்படங்களின் எண்ணிக்கை 03 ஆகும்.

9.1.3 புகைப்படத்தின் அளவு 18 x 15 ஆகும்.

9.1.4 புகைப்படத்தின் உள்ளடக்கத்திற்குப் பொருந்தாத ஏதேனும் வெளிப்புற அடையாளங்கள் இருந்தால் அதாவது வாட்டர்மார்க்ஸ், பெயர், திகதிக் குறிப்புகள் மற்றும் இலட்சினைகள் ஆகியவை புகைப்படத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தால் அந்தப் புகைப்படங்கள் போட்டியில் இருந்து அகற்றப்படும்.

9.1.5 கலாசார அலுவல்கள் அமைச்சினால் வேண்டப்படும் எந்த நேரத்திலும் போட்டிக்காக சமர்ப்பிக்கப்படும் புகைப்படங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாத அசல் கோப்புவை (RAW அல்லது JPEG) புகைப்படக் கலைஞர் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் மற்றும் தாமதமாகச் சமர்ப்பிக்கப்படும் புகைப்படங்கள் போட்டியில் இருந்து நீக்கப்படுவதற்கோ அல்லது வெற்றியினைப் பெறாமல் இருப்பதற்கோ நடுவர் குழு தீர்மானிக்கும்.

9.1.6 போட்டிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்துப் புகைப்படங்களும் சம்பந்தப்பட்ட கலைஞரினால் எடுக்கப்பட்ட புகைப்படங்களாக இருத்தல் வேண்டும். அங்கு அறிவுசார் சொத்துரிமை மற்றும் பட உரிமைகள் தொடர்பாக சட்டச் சிக்கல்கள் எழுந்தால் இது தொடர்பாக கலாசார அலுவல்கள் அமைச்சு எந்த வகையிலும் பொறுப்பேற்காது.

9.1.7 மேலும் இந்தப் புகைப்படங்கள் இதற்கு முன்னத் எந்தவொரு போட்டிக்காகவோ அல்லது பொதுக் கண்காட்சிக்காகவோ சமர்ப்பிக்கப்படாத புகைப்படங்களாக இருக்க வேண்டும்.

**<u>9.2 புகைப்படப் போட்டிக்காக வழங்கப்படும் பணப் பரிசில்கள் மற்றும் விருதுகள்</u>**

| **போட்டிப் பிரிவு** | **நிலை** | **பணப்பரிசு (ரூ.)** |
|---|---|---|
| புகைப்படம் | முதலாம் இடம் | 20,000.00 |
| | இரண்டாம் இடம் | 15,000.00 |
| | மூன்றாம் இடம் | 10,000.00 |
| | 05 ஆறுதல்ப் பரிசுகள் தெரிவு செய்யப்படும் | ஒரு வெற்றியாளருக்கு 5,000.00 வீதம் |

1. மேலதிக தகவல்களை www.cultural.gov.lk என்ற இணையத் தளத்தில் இருந்து பெற்றுக் கொள்ளலாம் மற்றும் மேம்பாட்டுப் பிரிவின் தொலைபேசி இலக்கமான 011-2861325 / தே.ஜெபராணி 0761199787 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**திலக் நந்தன கெட்டிஆரச்சி**
மேலதிக செயலாளர் (கலாசார மேம்பாடு)

**கை/ இட்டது: எச்.எம்.பி.ஹேரத்**
செயலாளர்,
புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு.


தொ.இல. - 0112-872020
பெக்ஸ் - 0112-879088
ஈமெயில் - intergov7@gmail.com

**புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு**

**அரச உத்தியோகத்தர்களுக்கிடையிலான குறு நாடகப் போட்டி - 2024**

**விண்ணப்பப் படிவம்**

**அ. <u>ஆக்கத்தை சமர்ப்பிப்பவரின் தனிப்பட்ட தகவல்</u>**

01. முழுப் பெயர் :-
........................................................................................................................
........................................................................................................................
02. முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :-
........................................................................................................................
........................................................................................................................
03. தனிப்பட்ட முகவரி :-
........................................................................................................................
...............................................................................................................
04. தொலைபேசி இலக்கம்:
.................................................................................

**ஆ. <u>ஆக்கத்தை சமர்ப்பிப்பவரின்</u> நிறுவனத்தின் தகவல்**

05. நிறுவனம்
........................................................................................................................
........................................................................................................................
06. நிறுவனத்திற்கு உரிய மாகாணம்
.......................................................................
07. மாவட்டம் -
........................................................................................................
08. பதவி
........................................................................................................................
09. அலுவலக முகவரி :-
........................................................................................................................
........................................................................................................................
அலுவலக தொலைபேசி இலக்கம் :-
...................................................................
10. அலுவலக பெக்ஸ் இலக்கம் :-
........................................................................

**இ. ஆக்கம் தொடர்பான விபரம்**

- ☐ சிறுகதை
- ☐ பாடலாக்கம்
- ☐ கவிதை
- ☐ சிறுவர் இலக்கிய ஆக்கம்
- ☐ குறு நாடகம்
- ☐ சித்திர ஆக்கம்
- ☐ குறுந் திரைப்படம்
- ☐ புகைப்படம

ஆக்கத்தின் பெயர் :-...............................................................

மேலே குறிப்பிடப்பட்டுள்ள சிறுகதை/ பாடலாக்கம்/ கவிதை/ சிறுவர் இலக்கிய ஆக்கம் / குறுநாடகம் / சித்திர ஆக்கம்/ குறுந் திரைப்படம் மற்றும் புகைப்படம் சுயாதீன ஆக்கம் என்றும் இந்தப் போட்டியின் போட்டி நிபந்தனைகளுக்கு நான் இணங்குவதாகவும் இதன் மூலம் உறுதியளிக்கின்றேன்.

திகதி ..................                    கையொப்பம் - ..........................................

பெயர் - ........................................

**ஈ. நிறுவனத் தலைவரின் பரிந்துரை**

இந்த நிறுவனத்தில் சேவையாற்றும் திரு / திருமதி / செல்வி .................................... ................................................ அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சிறுகதை/ பாடலாக்கம்/ கவிதை/ சிறுவர் இலக்கிய ஆக்கம் / குறுநாடகம் / சித்திர ஆக்கம் / குறுந் திரைப்படம் மற்றும் புகைப்படம் இவரின் ஆக்கம் என சான்று உறுதிப்படுத்துவதுடன் தேவையான நடவடிக்கைகளுக்காக இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

திகதி ............                    நிறுவனத் தலைவரின் கையொப்பம் ....................................

பதவி முத்திரை ................................